**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

முன்னிலை **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் நாள் திங்கட்கிழமை

**இடைநிலை மனு எண்.6/2025**
**மற்றும்**
**இடைநிலை மனு எண்.7/2025 ல்**

**இடைநிலை மனு எண்.5/2023**

**அசல் வழக்கு எண்.230/2022**

Dr. M. பிரியா, MBBS., DO.,
த/பெ முத்துகுமரசாமி,
க/பெ Dr. ஆனந்த சொக்கலிங்கம் MS.,(ENT) ... மனுதாரர்/வாதி

/ எதிர் /

1. Dr. M.ரம்யா, MBBS., DO.,
   க/பெ Dr. திருஞானம், M.D.,

2. Dr. திருஞானம்,
   த/பெ பொன்னையா.

3. சிட்டி யூனியன் பேங்க்,
   தில்லை நகர் கிளை,
   அதன் சார்பாக அதன் மேலாளர்,
   11 வது குறுக்குத்தெரு,
   தில்லைநகர்,
   திருச்சிராப்பள்ளி.

4. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி,
   தில்லைநகர் கிரை,
   அதன் சார்பாக அதன் கிளை மேலாளர்
   மெயின் ரோடு,
   11 வது குறுக்குத்தெரு
   தில்லைநகர்
   திருச்சிராப்பள்ளி.

... எதிர்மனுதாரர்கள்/
பிரதிவாதிகள்

இம்மனுக்களானது, கடந்த 03.07.2026 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.L.ரெங்கராஜன் அவர்களும், 1,2 எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.S.சங்கர்முரளி அவர்களும், முன்னிலையாகியும், 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் N.அண்ணாதுரை அவர்களும், 4ம் எதிர்மனுதாரர் தோன்றாத்தரப்பாளராக்கப்பட்டும், மனுக்கள், எதிருரைகள் மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாத பிரதிவாதங்களை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

## <u>பொதுவான உத்தரவு</u>

1. இ.ம.எண்.6/2025 மனுவானது மனுதாரர்/வாதியால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 11, விதி 14 மற்றும் 151–ன் கீழ் 1,2 எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகளுக்கு 05.05.2022 தேதியிட்ட அசல் உயிலை, ஏற்கனவே இ.ம.எண்.5/2023 மனுவில் பிறப்பித்த உத்தரவுபடி, கையெழுத்துக்களை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி வைக்க, இந்நீதிமன்றத்தில் உடனடியாக தாக்கல் செய்ய உத்தரவிடக் கோரியும்,

2. இ.ம.எண்.7/2025 மனுவானது, மனுதாரர்/வாதியால் மேற்படி பணிக்காக ஒரு வழக்கறிஞர்/நீதிமன்ற ஆணையரை நியமிக்கக் கோரி உரிமையியல்

நடைமுறைச் சட்டம் வகுமுறை 26, விதி 10(A) மற்றும் 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

3. இந்த இரண்டு மனுக்களும், ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதால், அவை பொதுவாக விசாரணை செய்யப்பட்டு, இந்த பொதுவான உத்தரவு பகரப்படுகிறது.

4. மனுதாரர்/வாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், மனுவில் கூறியுள்ள சங்கதிகளையே விவரித்துக் கூறி, வாதி இந்த வழக்கை பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளதாகவும், 1ம் பிரதிவாதி வாதியின் சகோதரி என்றும், அவர் தனக்கு, தங்களது தந்தை ஒரு முத்துக்குமாரசாமி ஒரு பதிவு செய்யாத உயிலை 05.05.2022 தேதியில் எழுதி வைத்ததாக கட்சி செய்துள்ளதாகவும், அவ்வாறு அவர் எந்த உயிலையும் எழுதி வைக்கவில்லையென்றும், ஏற்கனவே மேற்படி உயிலை கையெழுத்து நிபுணரின் பரிசோதனைக்கு அனுப்பக் கோரி இ.ம.எண்.5/2023 என்ற மனுவை தாக்கல் செய்து, அது அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் தொடச்சியாக, இந்த இரண்டு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, மேற்படி அசல் உயிலை 1,2 பிரதிவாதிகள் உடனடியாக தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டுமென்றும், அதை வாதியின் தகப்பனாரின் ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பங்களுடன் ஒப்பீடு செய்ய, ஒரு வழக்கறிஞர்/நீதிமன்ற ஆணையரை

நியமிக்க வேண்டுமென்றும், எனவே, இந்த மனுக்களை அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

5. 1,2 எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இந்த மனுக்கள் நிலைக்கத்தக்கதல்ல என்றும், இ.ம.எண்கள்.4/2023, 5/2023 ஐ 1,2 பிரதிவாதிகள் ஆட்சேபிக்கவில்லை யென்றும், ஆனால், உயில் உண்மையானது என்றும், அது எழுதப்பட்ட சம காலத்தில் உள்ள கையொப்பங்களுடன் தான் அதை ஒப்பிட்டு பார்க்க முடியும் என்றும், தேவைப்படின், நீதிமன்றமே மேற்படி கையொப்பங்களை ஒப்பிட்டுப் பார்க்க வழிவகை உள்ளது என்றும், ஆனால், வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற எண்ணத்தில், வாதியால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே, இந்த மனுக்களை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

6. இந்த இரண்டு மனுக்களிலும் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இந்த மனுக்கள் அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

7. இருதரப்பு கருத்துகளும், வழக்காவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் /வாதியால் அசல் வழக்கு பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்களுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்த

மனுதாரர்/வாதியால் இ.ம.எண்.4/2023 மற்றும் 5/2023 ஆகிய மனுக்களை தாக்கல் செய்து, சில ஆவணங்களை வரவழைக்கக் கோரியும், 05.05.2022 தேதியிட்ட முத்துக்குமாரசாமி எழுதியதாகக் கூறும் பதிவு செய்யாத உயிலை கையெழுத்து நிபுணரின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்றும், கோரி தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனுக்கள் 26.03.2024 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது.

8. ஆனால், அதில் மேற்படி பணிக்காக அந்த மனுக்களில், வழக்கறிஞர் / நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்படவில்லை. அதேபோல், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் இதுவரை தாக்கல் செய்யப்படவில்லை என்பது தெரிகிறது. இதனிடையே, IOB திருச்சி தில்லைநகர் கிளையியிலிருந்து முத்துக்குமரசாமியின் கையொப்பங்கள் அடங்கிய ஆவணங்கள் வரவழைக்கப்பட்டுள்ளது. மேற்படி அசல் உயில் தாக்கல் செய்யப்பட்டால்தான், அதையும், முத்துக்குமரசாமியின் ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பங்கள் அடங்கிய ஆவணங்களுடன், ஒப்பிட்டு பார்த்து அறிக்கை தருவதற்காக, மதுரை, வட்டார தடய அறிவியல் நிபுணருக்கு அனுப்ப இயலும். மேலும், இந்த பணிக்கு வழக்கறிஞர் /நீதிமன்ற ஆணையரை நியமிப்பது, நீதியின் நலனுக்கு உகந்தது என முடிவு செய்யப்படுகிறது. எனவே, இந்த மனுக்கள் பின்வருமாறு அனுமதிக்கத்தக்கதென முடிவு செய்யப்படுகிறது.

**9. முடிவாக,**

இந்த மனுக்கள் பின்வருமாறு அனுமதிக்கப்படுகிறது.

1) இந்த மனுதாரர்/வாதியால் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.4/2023 மற்றும் 5/2023 ஆகிய மனுக்களில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் தொடர்ச்சியாக, இந்த இரண்டு மனுக்களும் அனுமதிக்கத்தக்கதென முடிவு செய்யப்படுகிறது.

2) 05.05.2022 தேதியிட்ட முத்துக்குமாரசாமி எழுதியதாகக் கூறும் பதிவு செய்யாத அசல் உயிலை, 1,2 பிரதிவாதிகள் 2 வாரங்களுக்குள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

3) அவ்வாறு மேற்படி அசல் உயில் தாக்கல் செய்யப்பட்டவுடன் அதிலுள்ள பிரச்சினைக்குரிய முத்துக்குமாரசாமியின் கையெழுத்துக்களை, ஏற்கனவே IOB திருச்சி, தில்லைநகர் கிளையியிலிருந்து வரவழைக்கப்பட்ட முத்துக்குமரசாமியின் ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பங்கள் அடங்கிய ஆவணங்களுடன் அவற்றை ஒப்பிட்டு பார்த்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

4) இந்த மனுக்களில் கண்ட 05.05.2022 பதிவு செய்யாத உயிலில் உள்ள முத்துக்குமாரசாமி என்பவரின் கையெழுத்து இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிலிருந்து வரவழைக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பங்களுடன்

ஒப்பீடு செய்ய, மதுரை, வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு, வழக்கறிஞர்/ நீதிமன்ற ஆணையர் மூலம் அனுப்ப உத்தரவிடப்படுகிறது.

5) மேற்படி பணிக்காக வழக்கறிஞர் **செல்வி/திருமதி R.பிரியா, M.S.1714/2008** என்பவர், நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்படுகிறார். அவரது ஊதியம் மற்றும் போக்குவரத்துச் செலவினங்களுக்காக மொத்தம் **ரூ7,000/-**(ரூபாய் ஏழாயிரம் மட்டும்) நிர்ணயிக்கப்படுகிறது. மேலும், கையெழுத்து நிபுணருக்கு செலுத்த வேண்டிய செலவினம் மற்றும் நீதிமன்ற ஆணையருக்கான மேற்படி ஊதியம் ஆகியவற்றுக்கான செலவினங்களை, மனுதாரர்/வாதி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அதை மனுதாரர் தரப்பு நேரடியாக நீதிமன்ற ஆணையருக்கு செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

6) இந்த மனுக்களுக்கான செலவுத்தொகை இல்லை.

இந்த பொதுவான உத்தரவுகள், என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 20 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SARAVANAN B

Digitally signed by SARAVANAN B
Date: 2026.07.20 17:01:14 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை.

SARAVANAN B

Digitally signed by SARAVANAN B
Date: 2026.07.20 17:01:20 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**